DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 69/2025

Prosecution PW -3

| | | |
|---|---|---|
| Name | Subramaninyan | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 03.11.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தேவனாம்பட்டினம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நான் தேவனாம்பட்டினத்தில் நான் பணியில் இருந்தபோது எனது ரகசிய தகவலாளி போன் மூலம் வள்ளுவர் சுடுகாட்டில் 3 நபர்கள் கஞ்சா விற்பனை செய்வதாகவும் வந்தால் அ டையாளம் காட்டுவதாக கூறிய ரகசிய தகவலை பெற்று 10.10 மணிக்கு பொது நாட்குறிப்பில் பதிவு செய்து, காவல் ஆய்வாளருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று எழுத்து மூலம் முன் தகவல் அறிக்கை அனுப்பினேன். அந்த முன் அனுமதி கடிதம் அ.த.சா.ஆ**-6.** பின்னர், நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் தம்பிராஜன், தலைமை காவலர்கள் சுரேஷ்குமார், சாமிநாதன் ஆகியோரை கஞ்சா வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் இரண்டு இருசக்கர வாகனங்களில் புறப்பட்டு 11.00 மணிக்கு சம்பவ இடமான தேவனாம்பட்டினம் வள்ளுவர் சுடுகாடு அருகில் சென்று கண்காணித்தபோது, அங்கு இருந்த தகவலாளி அங்கு இருந்து 3 நபர்களை அடையாளம் காட்டிவிட்டு சென்றுவிட்டார். அந்த 3 நபர்கள் போலிசாராகிய எங்களை பார்த்ததும்தப்பி ஓட எத்தனித்தார்,அவர்களில் ஒருவரை மடக்கி பிடித்தோம். மற்ற இருவர்கள் தப்பியோடிவிட்டார்கள். பிடிப்பட்ட நபரை விசாரிக்க அவர் தன் பெயர் ரமணா என்றும், தப்பியோடியவர் பெயர் நிவாஸ், ராஜேஷ் என்றும் பெயர், விலாசத்துடன் கூறினார். மேற்படி நபரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக நம்ப தகுந்த தகவல் வந்துள்ளது என்றும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்று சொன்னேன். அவ்வாறு சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சோதனை நமுனா சார்வு செய்தேன். அந்தசோதனை நமுனா அ.த.சா.ஆ**.1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1 வது எதிரி அவ்வாறு அழைத்து செல்ல தேவையில்லை, நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அதை நான் எழுத்து மூலம் எழுதி அந்த நபரிடம் கையெழுத்து வாங்கினேன். அந்த சோதனை சம்மத கடிதம்

அ.தசா.ஆ-**2** ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டது. பின்னர், எதிரியை சோதனை செய்ய பச்சை நிற பையில் , காய், பூக்கள், விதை இலையுடன் கூடிய பொருள் இருந்தது. அதை சிறிதளவு எடுத்து முகர்ந்து பார்க்க கஞ்சா வாடை வீசியது. மேலும் அந்த பையை 20 சிறு சிறு பிளாஸ்டிக் பையில் கஞ்சா இருந்தது. அந்த 20 சிறு சிறு பொட்டலத்தையும் , பையில இருந்த கஞ்சாவோடு கொட்டி ஒன்றாக்கப்பட்டது. அந்த கஞ்சாவை வைத்திருக்க எதிரிக்கு அனுமதியோ உரிமையோ இல்லை என்று காரணம் கூறி 12.30 மணிக்கு கைது நமுனா சார்வு செய்து, எதிரியை கைது செய்தேன். அந்த கைது நமுனா அ.தசா.ஆ-**3** ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டது. எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் எடுத்து சென்ற Electronic தராசில் எடை போட்டு பார்க்க 1.200 கிலோ இருந்தது. பின்னர், வெள்ளை நிற பையில் இருந்த கஞ்சாவை மஞ்சள் நிற பைக்குள் வைத்து நூலால் கட்டி, SHO சீல் வைத்து சாட்சிகளிடமும் எதிரியிடமும் கையொப்பம் வாங்கினேன், நானும் கையொப்பம் செய்தேன். பின்னர் கஞ்சாவை கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் சுரேஷ்குமார், சாமிநாதன் முன்னிலையில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்று நானும் கையொப்பம் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகசர் தான் என்னிடம் காட்டப்படுவது. அது அ.த.சாஆ-**4** ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டது. மேற்படி நடவடிக்கை முழுவதையும் என்னுடன் வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் தம்பிராஜ் என்பவர் அவரது செல்போனில் விடியோ கவரேஜ் செய்தார். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதை என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் சுரேஷ்குமார், சாமிநாதன் முன்னிலையில் மதியம் 1.30 மணி முதல் 2.30 மணிவரை பதிவு செய்தேன். பின்னர் 15.00 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து 1 முதல் 3 எதிரிகள் மீது நிலைய குற்ற எண். 10/2025, பிரிவு 8(c),20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ-**7**. பின்னர் என்னுடைய நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கையை பிரிவு 57NDPS Act ன் கீழ் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு 57 NDPS Act ன் கீழான அறிக்கை அ.த.சா.ஆ-**8**. பின்னர் வழக்குகோப்பினை ஆய்வாளர் முத்துகுமார் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். சிறப்பு உதவிஆய்வாளர் தம்பிராஜன் அவரது செல்போனில் பதிவு செய்த வீடியோவை செல்போன் கடை வைத்திருக்கும் விஜி என்பவர் மூலம் பென்டிரவ் பதிவிறக்கம் செய்து 63 BSA சான்று பெறப்பட்டது. அந்த பென்டிரைவ் சா.பொ.ஆ.**3**. பிரிவு 63 BSA சான்று அ.த.சா.ஆ.**9**. சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட வீடியோ திறந்த நீதிமன்றத்தில் சாட்சிகள் மற்றும் எதிரிகள் மற்றும் அவரது வழக்கறிஞர் முன்பு போட்டுக்காண்பிக்கப்பட்டது. சாட்சி எதிரி ரமணாவை வீடியோவில் பார்த்து அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ரமணாதான் அவர் என்று கூறினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

சம்பவ இடத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் முடித்த பின்னர் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் தம்பி ராஜன் செல்போனை நிலைய எழுத்தரிடம் கொடுக்க சொல்லி அதன் பிறகு செல்போனில் உள்ள வீடியோ பதிவை ஸ்டியோ கடையில் கொடுத்து பென்டிரைவில் பதிவிறக்கம் செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை சம்பவத்தன்று விசாரித்தார். இதை ஆய்வாளரிடம் சொன்னேன். ஆய்வாளரிடம் செல்போனில் உள்ள

வீடியோ பதிவை ஸ்டியோ கடையில் கொடுத்து பென்டிரைவில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்று கூறவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்ற மகஜரில் கிரின் கலர் பையை கைப்பற்றவில்லை என்று கூறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் பகல் 1.00 மணிக்கு தயார் செய்யப்பட்டது. 12.30 மணிக்கு தயார் செய்த கைது நமுனாவில் கஞ்சாவின் எடை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஸ்டியோ கடை உரிமையாளர் விஜி என்பவரிடம் அன்றே பென்டிரைவ் பதிவிறக்கம் செய்து எழுத்தர் மூலம் வாங்கினேன். விஜியை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 3 முதல் 4 மணி நேரம் இருந்தோம். சம்பவம் ஆரம்பம் முதல் இறுதி வரை வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் இல்லை முக்கியமான நிகழ்வுகளை மட்டும் விட்டுவிட்டு எடுக்கப்பட்டது. இதை ஆய்வாளர் விசாரனையிலோ அல்லது பிரிவு 57 அறிக்கையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். விஜியின் ஸ்டியோ கடையின் பெயர் தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எந்த தடயப்பொருட்களும் கைப்பற்றவில்லை என்றாலும் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. எனக்கே தெரிந்த காரணத்தின் பெயரில் 1 ம் எதிரியை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று வீடியோ பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எந்த சம்பவமும் இல்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(S/d-.G.Sundararajan B,Sc.,B.L.)
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்